International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தொல்காப்பியர் சுட்டும் அகப்பொருள் மரபாக்கம்

**வே. சிவராஜன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் பா. திருஞானசம்பந்தம்**
இணைப்பேராசிரியர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர் - 608 002

**ஆய்வுச் சுருக்கம்**

தொல்காப்பிய மரபு என்பது முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று பின்னப்பட்ட ஐந்திணை மரபிற்குள் நிகழ்வதாகும். நிலம் பொழுதென்ற முதற்பொருள்களோடு திணைநிலம் சார்ந்த கருப்பொருள்களையும் மாந்தர்தம் அகம் சார்ந்த உரிப்பொருள் களையும் பிணைத்து, அகத்திணை மற்றும் புறத்திணைகளின் கலப்பில் கட்டமைப்பதே தொல்காப்பியர் சுட்டும் அகப்பொருள் மரபாக்கமாகும்.

**முதன்மைச் சொற்கள்:** தொல்காப்பியர், முப்பொருள்கள், அன்பின் ஐந்திணை, அகப்பொருள், மரபாக்கம், தலைமக்கள்,

## முன்னுரை

அகப்பொருள் என்பது ஆணும் பெண்ணும் அன்பின் காரணமாகக் கொள்ளும் அக உணர்வுகளைக் (காதல்) கூறும் தமிழர் மரபாகும். தொல்காப்பியம் வகுத்த இலக்கணப்படி, இது ஐந்திணை மற்றும் கைக்கிளை, பெருந்திணை எனப் பிரிக்கப்பட்டு, பெயர் குறிப் பிடாமல் தலைவன்-தலைவி எனப் பாடுதல், முப்பொருள்கள் (முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்) பயன்படுத்துதல் ஆகியன முக்கிய மரபுகளாகும். ஆகவே, இக்கட்டுரை தொல்காப்பியர் சுட்டும் அகப்பொருள் மரபாக்கம் பற்றி ஆராய்கின்றது.

## அகப்பொருள் மரபுகள் - விளக்கம்

‘அகம்’ என்பது பொதுவாகக் காதற்பாடல்களைக் குறிக்கும். உள்ளத்தில் புலப்படும் உணர்வுகள் அகம் என்றும், போர், வீரம், கொடை, ஆட்சி, புகழ் முதலிய பிற வாழ்க்கைத் துறைகளைப் புறம் என்றும் கூறுதல் மரபாகும். ஆனால் இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் அகம் என்பதற்குத் தனியே விளக்கம் கூறவில்லை. எனினும், அதற்கு உரையெழுதிய இளம்பூரணர், “அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம்”[1] என்கிறார். இதனைப் பற்றி நச்சினார்க்கினியர் கூறுமிடத்து, “ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தி யும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விரு வரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்புறுவதோர் பொருளாதலின் அதனை ‘அகம்’ என்றார். ஆகவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயர்”[2] என விளக்குவார். ‘அகம்’ என்னும் சொல், மனம், உள்ளிடம், இடம் உள்ளிட்ட பலபொருள் தரும் ஒரு சொல்லாகும். அகமென்பது உள்ளமாகிய மன உணர்வினால் நுகர்ந்து இன்பமுறும் காம இன்பத்தை உணர்த்துகிறது. ‘அகம்’ என்னும் சொல்லுக்கு ‘உள்ளம்’ என்னும் பொருள் அடிப்படையில் எழுந்த விளக்கங்களாகும். மேலும், இச்சொல் இல்லத்தையும் குறிக்கும். இல்லத்தில் உள்ள அக உறுப்பினர்களான தாய், தந்தை, தலைவி,

தோழி, தலைவன், பாங்கன், இளையோர் போன்றோரைக் கொண்டு அமைவதால் அகம் எனப்படும்.

**அகத்திணை மரபாக்கம் - விளக்கம்**

“எந்தப் பொருளை எந்தச் சொல்லினால் எந்த நெறியுறச் சான்றோர்கள் கூறினார் களோ, அந்தப் பொருளை அந்தச் சொல்லினால் அந்நெறியுறக் கூறுதலே மரபு ”[3] என்பர். ஆதலால் இலக்கியங்கள் மரபு வழிப்பட்ட சொற்களால் அமைய வேண்டும். மரபு நெறி யிலிருந்து சிறிதளவும் திரிதல் கூடாது எனத் தொல்காப்பியம் அழுத்தந் திருத்தமாக எடுத்து உரைக்கின்றது. இதனை,

**“மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை**

**மரபு வழிப்பட்ட சொல்லினான் ”[4]**

இதனைப் பற்றி மேலும் ஒரு நூற்பாவில், மரபு திரியுமானால், உலகத்துச் சொல்லெல்லாம் பொருளிழந்து போகும். என்பதை,

**“மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும் ”[5]**

எனத் தொல்காப்பியம் உணர்த்துகின்றது. இலக்கண நூல்களும் மரபுநிலை திரியாமையே மாட்சிமைக்கு உரியது என்று கூறுகின்றன. இதனைப் பற்றி மோகனராசு கூறுமிடத்து, “ஒரு பொருளை உணர்த்த ஒருமுறை வழங்கப்படும், ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு சொல் நிலை யானதாக இருந்தால் குழப்பங்கள் ஏற்படா. ஒரு பொருளை உணர்த்தக் காலந்தோறும் சொல் மாறிக்கொண்டே இருக்குமானால், அதனால் பெருங்குழப்பங்கள் ஏற்படும். அம் மாற்றத்தினால் ஏற்படும் விளைவும் பெரும்பயன் தரத்தக்கதாக அமையும் என்று கொள்ள முடியாது ”[6] என்கிறார். ஆதலால், இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்தனர் எனலாம். இதனடிப்படையில் அமைந்த அகத்திணை இலக்கண அமைப்புமுறை பற்றிக் காணலாம்.

**மரபுவழி அகத்திணை மரபுகள்**

தமிழில் காலத்தால் முற்பட்டது சங்க இலக்கியம். அதனைத் திணை இலக்கியம் எனில் பொருத்த முடையதாகும்.[ஏனெனில், அதனை அகத்திணை, புறத்திணை என்னும் இரு வகையினதாகப் பாகுபடுத்தியுள்ளனர். எனவே, இதனைப் பொருள் இலக்கியம் எனக்கொண்டு அகப்பொருள், புறப்பொருள் என வழங்கப்படுகிறது.

**அகப்பொருள் - விளக்கம்**

அகப்பொருள் என்பது மனதளவில் உய்த்து உணரப்படும் ஓர் உணர்வாகும். அது உள்ளம் மட்டும் நுகரும் பொருளாகும். அதனை உணர்ந்தவாறே கூறவியலாத தன்மை கொண்டது. உணர்ந்தவரேயன்றிப் பிறர் அறியவிலாததாகும். “மணப்பருவமுற்ற ஆணும், பெண்ணும் மனம் ஒன்றுபட்டு இருவரும் ஒருவராய் ஒன்றி வாழும் நிகழ்ச்சியை அகவொழுக்கம் ”[7] என்பர். அகவொழுக்கம் என்பதே அகத்திணையாகும். அஃது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கனுள், இன்பம் ஒன்றினை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பாடப் பெறுவன அகப்பொருள் பாடல்களாகும்.

**அன்பின் ஐந்திணை**

குறிஞ்சி முதலான ஐந்தும் ஒத்த காமத் தன்மையால் ஒன்றாயினும், ஒழுக்க வகை யால் தனிநிலை குறிப்பதற்காக, ‘ஐந்திணை’ என்று எண்ணுப் பெயர் பெற்றது. “திணை என்ற சொல்லுக்கே ஒழுக்கம் என்ற பொருள் உண்டு. ஒழுக்கங்கள் ஐந்து வகையாகப் பிரித்துப் பேசப்பெறுவதால் இவற்றை ஐந்திணை நெறி என்று குறிப்பிடும் வழக்கமும் உண்டு”8 என்று ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார்.

திணை இலக்கியங்கள் நிலத்தை அடிப்படை யாகக் கொண்டே அமைகின்றன. இதில் நிலம், பருவப் பொழுதுகள் இயற்கை ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு மனித வாழ்க்கையுடன் இணைத்து பாடப்படுவதாகும். இதனுள் அகத் திணைக்குரிய உள்ளார்ந்த அன்பு நிலையை அறிய ஐந்திணையே பெரிதும் உறுதுணையாக அமைகின்றது எனலாம். கைக்கிளையாவது காட்சியளவிலே தோன்றி முடிந்துவிடுகிறது. பெருந்திணையோ இயல்பு வாழ்விற்குப் பொருத்த மற்றதாக விளங்குகிறது. எனவே, ஐந்திணைத் துறைகளே சிறப்புற அமைகின்றன. இதன் காரணமாகத் தொல்காப்பியரும் ஐந்திணைப் பாகுபாட்டிற்கு முதலிடம் தந்துள்ளார் எனக் கருத வழிவகுக்கிறது. அவர் வகுக்கும் ஐந்திணையாவது,

**“நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்**

**படுதிரை வையம் பாத்திய பண்பே ”[9]**

எனப்படுகிறது. ‘நடுவண் ஐந்திணை’ என்பது முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பனவாகும். இதனை நம்பியகப்பொருள்,

**“குறிஞ்சி பாலை முல்லை மருதம்**

**நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே ”[10]**

என்று குறிப்பிடுகின்றது. குறிஞ்சியும் பாலையும் முல்லையும் மருதமும் நெய்தலும் அவ்வைந் திணைக்கும் பொருந்திய பெயர் என்கின்றது. ஐந்திணையின் நிலப்பாகுபாட்டினை இலக்கண ஆசிரியர்கள் கூறுமிடத்துத் தொல்காப்பியர் ‘நடுவணதொழிய’ என்று கூறுவதால் பாலைக்கு என்று தனிநிலம் இல்லாமையை அறியமுடிகிறது. இவரையடுத்த இலக்கண நூலாகிற இறையனார் அகப்பொருள் இதனையே கூறுகின்றது.

**முப்பொருளும் அமைப்புமுறையும்**

இயற்கையுடன் இணைந்து வாழ்வை நடத்திய பண்டைத் தமிழர் வாழ்க்கை உண்மை -களைப்

புலனெறி வழக்கினும், அகப்புறப் பொருட் பகுப்பினும் முதல், கரு, உரி எனும் முப்பொருட் பின்னணியில் உணர்த்துகின்றனர். இலக்கண, இலக்கிய ஆசிரியர்கள். உரிப் பொருளுக்கு முதலும், கருவும் அடிப்படையாக அமைத்து அதனை விளக்கிக் கூறவில்லை. கூறவந்த பொருளின் பயன்சிறக்காது என்பதை ஒவ்வொரு அகவிலக்கியமும் நிறுவுவதைக் காணமுடிகிறது. இதனைத் தொல்காப்பியர்,

**“முதல்கரு உரிப் பொருள் என்ற மூன்றே**

**நுவலுங் காலை முறைசிறந் தனவே**

**பாடலுட் பயின்றவை நாடுங் காலை”**[11]

என்று கூறுகின்றார். இதனையே, இறையனார் அகப்பொருளும் கூறுகின்றது. இதனால் அகநோக் கோடு இயற்கையை வியந்து காணும் நோக்கும், அழகு நோக்கும் தெளிவுறுத்தப்படுகின்றது. இதனையே நம்பியகப்பொருள்,

**“முதற்பொருள் கருப்பொருள் உரிப் பொருள் எனமுறை**

**நுதற்பொருள் மூன்றினும் நுவலப்படுமே”**[12]

என்ற நூற்பாவின் மூலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணை களுக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் என்ற மூன்று பொருள்களும் கூறப் பட்டமை அறியமுடிகின்றது.

**இலக்கணம் கூறும் முதற்பொருள்**

முதற்பொருள் என்பதற்கு முதன்மையான பொருள், தலைமையான பொருள் மூலமான பொருள் என்று பொருள்படும். இஃது அகத்திணை நெறியினை விளக்க முதலாவதாக அமையும் அடிப்படைப் பொருள் என்பதால் இதற்கு இப்பெயர் சுட்டப்பட்டது எனலாம். இது குறித்துத் தொல்காப்பியர்,

**“முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்**

**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே”**[13]

எனக் குறிக்கின்றார். முதற்பொருளாக விளங்குவன நிலமும், பொழுதும் ஆகும். இதனுள் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்தாகவும், பொழுதைப் பெரும்பொழுது, சிறுபொழுது என்று இரண்டாக வும் வகைப்படுத்தி உள்ளனர். இதனையே இறையனார் அகப்பொருளும் கூறுகின்றது. மேலும், நம்பியகப்பொருளும்,

“நிலமும் பொழுதுமென முதலிரு வகைத்தே”14

என்று முதற்பொருளை நிலமும், பொழுதும் என இரண்டு வகையாகக் கூறுகின்றது. இதன் விரிவாக்கத்தைப் பின்வருமாறு பாகுபடுத்தியுள்ளனர்.

**நானிலம் பாகுபாடு**

முதற்பொருளின் ஒரு பகுதியாகிய நிலத்தினை நான்கு பகுதியாகப் பிரித்துக் கூறுவர். காடும் காடு சார்ந்த இடமும் முல்லை, மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி, வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப் பெயரிட்டு வழங்கினர் தமிழ்ச்சான்றோர். தொல்காப்பியர் இவற்றை முறையே

**“காடுறை உலகம், மைவரை உலகம்,**

**தீம்புனல் உலகம், பெருமணல் உலகம்”**[15]

என்று குறிப்பிடுகின்றார்.

**பாலை நிலம்**

நான்கு நிலங்கள் தவிர ஐந்தாவது நிலம் ஒன்று உண்டு எனத் தொல்காப்பியரே கூறிச் செல்கின்றார். இத்தகைய நிலம் நம் நாட்டில் இல்லாமையால் நான்கு நிலப்பாகுபாடு செய்து உள்ளனர். இயற்கை மாறுபாட்டின் காரணமாகப் பருவமழை பெய்யாது வளங்குன்றிய காலத்தில் முல்லை நிலமும், குறிஞ்சி நிலமும் தம் இயல்பை இழந்து புதியதொரு தன்மை யைப் பெறும். இத்தன்மையுடைய நிலத்தையே பாலை என்றனர். இந்நிலத்திற்கு என்று தனிநிலம் பகுக்கப்படவில்லை. எனினும், பின்னாளில் வந்த சிலப்பதிகாரம் இதனை,

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**

**நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்**

**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”**[16]

என்னும் பாடலில் முல்லையும் குறிஞ்சியும் தன்னியல்பு திரிந்த நிலப்பகுதி பாலைக்குரியது என்று கூறுகின்றது. இதனை **திருவிருத்தத்தில்** நம்மாழ்வாரும்,

**“நானிலம் வாய்க் கொண்டு நன்னீர்**

**அறமென்று கோது கொண்ட**

**வேனிலம் செல்வன் சுவைத்து உமிழ்பாலை”**[17]

என்று இந்நிலத்தை மிக அழகாகக் குறிப்பிடு கின்றார். இளங்கோவடிகள் இரண்டு நிலத்தை எடுத்துக்கொண்டு விளக்குகிறார். ஆனால், நம்மாழ்வார் நான்கு நிலத்தையும் எடுத்துக் கொண்டு விளக்கிச் செல்வதைக் காணமுடிகிறது.

**காலப் பாகுபாடு**

காலத்தைப் பொழுது என்றும் கூறலாம். பொழுதினைப் பெரும்பொழுது, சிறுபொழுது என இரண்டு கூறாகப் பகுத்துக் கூறுவர்.

**பெரும்பொழுது**

பெரும்பொழுது என்பது ஓராண்டை ஆறு பிரிவாகப் பிரித்துக் கூறுவதாகும். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும். இவற்றுள் கார் என்பது மழை பெய்யும் காலமாகும். இதற்குரிய மாதங்களாக ஆவணித் திங்களையும், புரட்டாசித் திங்களையும் கூறுவர். கூதிர் என்பது குளிர்

காலமாகும். இஃது ஐப்பசி, கார்த்திகைத் திங்களில் தோன்றும். மார்கழி, தை ஆகிய முன்பனிக்காலமாவது பனியின் ஆரம்பநிலையாகும். இஃது மாசி, பங்குனித் திங்களில் தோன்றும். இளவேனில் என்பது கோடைகாலத்தின் ஆரம்பநிலையாகும். இதற்குரிய மாதங்கள் சித்திரை, வைகாசியாகும். முதுவேனில் என்பது கோடைகாலத்தின் இறுதிநிலையாகும். இது ஆனியும், ஆடியும் சேர்ந்த காலப் பகுதியில் தோன்றுவதாகும்.

**சிறுபொழுது**

சிறுபொழுது என்பது ஒரு நாளின் ஆறு பகுதிகளாகும். இவற்றை வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்று தொல்காப்பியர் குறிப்பிடுவர். வைகறை என்பது இராப்பொழுதின் பிறகூறாகும். விடியலாவது பகற்பொழுதின் முற் கூறாகும். எற்பாடு என்பது பகற்பொழுதின் பிற்கூறாகும். நண்பகலாவது பகற்பொழுதின் நடுக்கூறாகும். மாலை என்பது இராப்பொழுதின் முற்கூறாகும். யாமம் என்பது இராப் பொழுதின் நடுக்கூறாகும். ஒவ்வொரு கூறும் நாழிகை கொண்டவையாகும்.

**இலக்கணம் கூறும் கருப்பொருள்**

கருப்பொருள் என்பது இடத்திலும், காலத்திலும் தோன்றும் பொருளாகும். இஃது முதற்பொருளின்றும் தோன்றுவதாகும். இது தெய்வம், உணவு, மக்கள், மரம், விலங்குகள், பறவைகள், பறை, தொழில், பண், பூ, நீர், ஊர், யாழ் எனப் பலவற்றைக் கொண்டது. இதனை,

**“தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப ”[18]**

என்று தொல்காப்பியர் கருப்பொருளை 14 வகையாக வகைப்படுத்தியுள்ளார். இதனையே இறையனார் அகப்பொருளும் கூறுகின்றது. மேலும், இதனைப் பற்றி நம்பியகப்பொருள்,

**“ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு**
**ஊர்நீர் பூமரம் உணாப்பறை யாழ்பண்**
**தொழிலெனக் கருது ஈரெழு வகைத்தாகும் ”[19]**

எனும் நூற்பாவின்வழி, தெய்வம் முதலாகத் தொழில் ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்கு வகையினை உடையது கருப்பொருள் என விளக்குகின்றது.

**இலக்கணம் கூறும் உரிப்பொருள்**

உரிப்பொருள் என்பது மக்களுக்கு உரிய பொருளாகும். அவர்கள் வாழும் வாழ்க்கை நெறியை, ஒழுக்கத்தைக் குறிப்பதே உரிப் பொருளாகும். “நம்பிறப்போடு ஒட்டியது, உலகப் பிறப்பை அருளுவது, யாண்டும் பரந்தது, உணர்ச்சியுள் வலியது, ஐம்புலவின்பமும் ஒழுங்கு தருவது, எண்ணம், சொல், செயல் எல்லாம் இனிப்பது எது? காதல், காதல், இக்காதலே அகத்திணை இலக்கியத்தின் பாடற் பொருளாம் ”[20] என்று வ.சுப.மாணிக்கம் விளக்குகிறார். ஆகவே, ஐந்திணைக்கும் தனித்தனியாக ஐந்துவகை ஒழுக்கத்தை வரையறை செய்துள்ளனர். அவ்வைந்து வகை ஒழுக்கத்தைத் தொல்காப்பியர்,

**“புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங் காலைத் திணைக்குரியப் பொருளே ”[21]**

என்ற நூற்பாவில் குறிப்பிடுகிறார். புணர்தல் என்பது ஆண், பெண் கூடல்; பிரிதல் என்பது தலைவியை விட்டுத் தலைவன் ஒரு காரியத்தின் பொருட்டுப் பிரிதல்; இருத்தல் என்பது பிரிவுற்ற தலைமகன் வரும்வரை தலைவி தலைமகன் திரும்பி வருவான் என்று ஆற்றியிருத்தல்; அதாவது நம்பிக்கையோடு பொறுத்திருத்தல்; இரங்கல் என்பது ஆற்றாமை; ஊடல் என்பது தலைவன் தலைவியரிடையே நேரிடும் சிறு சண்டை; இதனையே இறையனார் அகப் பொருளும் கூறுகின்றது. மேலும், இதனைப் பற்றி நம்பியகப்பொருள்,

**“புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்**
**இரங்கலும் இவற்றின் நிமித்தமும் எனவாங்கு**
**எய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தே ”[22]**

என்ற நூற்பாவின் வழி உரிப்பொருள் என்பது புணர்தலும் புணர்தல் நிமித்தமும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும், ஊடலும் ஊடல் நிமித்தமும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும் என நம்பியாசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

**தலைமக்கள்**

களவு ஒழுக்கத்தின் மிக முக்கிய நிகழ்வுகள் யாவும், தலைவன் மற்றும் தலைவியைத் முன்னிறுத்தியே அமைவதனால் அவர்களே தலைமக்கள் எனப்படுவர். அன்பின் ஐந்திணைகளிலும் இவர்களது பண்புநலன்கள் உயர்ந்த வரம்பினைக் கொண்டு படைக்கப்படுதலால், தலைமக்களாகிய தலைவன் மற்றும் தலைவி தங்களுக்குள் ஒத்த பண்பினை கொண்டவர்களாக இருக்க வேண்டிய அவசியத்தை,

**“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு**
**உருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே யருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே ”[23]**

என்ற தொல்காப்பிய நூற்பாவழி உணரலாம். மேலும் எத்தகைய பண்புடையவராக தலைமக்கள் விளங்கக்கூடாது. என்பதை,

**“நிம்பிரி கொடுமை வியப்போடு புறமொழி**
**வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை**

**இன்புறல் ஏழைமை மறப்பொடு ஒப்புமை**
**என்றிவை இன்மை என்மனார் புலவர்”[24]**

என்றும் நூற்பாவழி அறியலாகிறது. தொல்காப்பிய நூற்பா படி தலைவன் தலைவியை விட தகுதிப் பாடுகளில் உயர்ந்து விளங்கவேண்டும் என்ற கருத்து மிக்கோனாயினும் கடிவரை யின்றே எனக் கூறுவதன் மூலம் புலனாகிறது. மேலும் இக்கருத்துப் பாலினப் பேதத்தை உள்ளடக்கிய தாக அமைந்துள்ளது என்பது மறுக்க இயலாதது.

**தலைவன்**

அகவாழ்வில் தலைமை நிலையில் விளங்கும் ஆண்மகன் தலைவன் ஆவான். களவுக்காலத்தில் தலைவியின் மீது அன்புடையவனாகவும் அவளைக் காணப் பலத்தடை களைத் தாண்டித் துணிந்து வருபவனாகவும், கற்புக் காலத்தில் குடும்பப் பொறுப்பினை உணர்ந்து, பொருளீட்டப் பிரிந்து செல்பவனாகவும், பிரிந்து சென்றாலும் தலைவியின் மீது அன்பு குறையாதவனாக இருக்கும் பண்பினை உடையவனாய் திகழ்கி றான். இருப்பினும் கற்பு வாழ்வில் பரத்தையை நாடும் இழிகுணம் கொண்டவனாகவும், பின் உண்மையை உணர்ந்து தான் செய்த தவறுக்கு வருந்தித் தலைவியிடம் பணிந்து அன்பில் மிகுந்து திகழ்பவனாகவும் விளங்குகிறான்.

**தலைவி**

அகத்திணை ஒழுக்கத்திற்குரிய ஒழுகலாறுகள் அனைத்தும் தலைவியை சார்ந்தே அமைகின்றன. அகத்திணைக்குரிய உரிப்பொருள்கள் அனைத் தும் தலைவியை நடுவணாகக் கொண்டே அமைகின்றன. அக ஒழுக்கத்தில் தலைமை பண்புடன் விளங்கும் பெண்ணே தலைவி எனப் படுகிறாள். தலைமகளுக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களை,

**“அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப”[25]**

என்று குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். மேலும், தலைவி கற்புடையவள்.

**“உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்”[26]**

என்று தொல்காப்பியர் எடுத்துரைக்கின்றார். தலைவித் தன் மன ஓட்டத்தைக் குறிப்பால் உணர்த்தும் வல்லமை பெற்றவள், காதலில் நுட்பம் அறிந்தவளாய் திகழ்கிறாள். கற்பு மற்றும் களவு காலத்தில் தலைவனின் வரவை எதிர் பார்ப்பவளாகவும் தலைவன் வராத போது மனம்உருகி உடல்மெலிந்து காணப்படுபவளாகத் திகழ்கிறாள். களவு வாழ்வில் தோழியிடத்து அறத்தோடு நிற்கிறாள். கற்பு நெறியில் இல்லறத்தைக் காக்கும் பண்பு தலைவனுக்கு உண்டு. இல்லறம் நிகழ்த்தும் தலைவிக்கு நிலை பெற்றுக் காண வேண்டிய பண்பு நலன்களாக,

**“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”[27]**

எனத் தொல்காப்பியர் வரையறைத் தருகின்றார். செறிவு, நிறைவு, அன்பு, அறிவு ஆகிய குணங்கள் நிறைந்தவளாய் தலைவி விளங்குகி றாள். இருப்பினும் தன்னைப் புகழ்ந்து தாமே சொல்லிக் கொள்ளும் தற்புகழ்ச்சி அற்றவளாய் விளங்குகிறாள். கற்பு மற்றும் காமத்தின்பால் நல்லொழுக்கம் நிறைந்தவளாய், பொறுமையுடை யவளாய், வளம் பொருந்தியவளாய், விருந்து படைக்கும் தன்மை உடையவளாய், சுற்றத்தா ரைக் காத்து நிற்பவளாய், இல்லறம் நடத்தும் தலைவி திகழ்கிறாள். தலைவன் செய்யும் பிழை களுக்கு ஊடல் கொண்டாடும் அவன் பிழையை மன்னித்துப் பொறுத்து அவனுடன் நல் வாழ்க்கையும் மேற்கொள்கிறாள்.

**தோழி**

செவிலியின் மகளே தோழியாவாள். இவள் அகத்திணை அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கிறாள். எப்பொழுதும் தலைவியை விட்டு நீங்காதவளாய் தலைவியின் உள்ளத்து உணர்ச்சிகளை அறிந்தவளாகவும் திகழ்கிறாள். தலைவியின் களவு மற்றும் கற்பு வாழ்க்கை இரண்டிலும் துணைநிற்கிறாள்.

ஆழ்ந்து சிந்திக்கும்போது தோழியின் உயர் பண்புகள் நம் உள்ளத்தை உருக்கு- கின்றன என்றும், தலைமைப் பாத்திரங்கள் காதல் உணர்ச்சியால் தவிக்கும் போதும் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபடும் போதும் உலகியல் உண்மைகளோடு வாழ்க்கை அனுபவங்களை இணைத்துச் சமநிலையைக் காண முற்படல் ஒருவகை கலைத்திறனாகும். அக்கலைத்திறனை நாடகநலத்துடன் கையாளும் கலைச்செல்வியே தோழியாவாள் என்றும் குறிப்பிடுவது இணைத்து எண்ணத்தக்கது. அகத்திணைக் கருத்தில் குறியிடம் குறித்தல், வரைவுகடாதல், அறத்தொடு நிற்றல், தலைவனைப் பிரிந்த தலைவிக்கு ஆறுதல் கூறுதல், வாயில் மறுத்தல், ஊடல் உணர்த்தல், தலைவனைச் செலவழுங்க செய்தல் ஆகிய பல்வேறு சூழ்நிலையில் தோழியின் பங்கு மிகக் குறிப்பிடத்தக்கதாகும்.

**செவிலி**

தலைவியின் குழந்தைப் பருவம் முதல் இல்லறம் நடத்தும் வரை அவள் நலனைப் பெரிதும் விரும்பி அவளைக்காக்கும் பொறுப்பை யுடைய அகத்திணை மாந்தராகச் செவிலித் திகழ்கிறாள். இவர்களை வளர்ப்புத்தாய் எனும் நோக்கில் ஆராய்ந்தால் நற்றாயை விட தலைவி யின் இன்பத்தில் அக்கறை உடையவளாய் திகழ்கிறாள். உடன்போக்குச் சென்ற தலைவிக்கு

ஆபத்து நேருமோ என்ற உணர்வில் தாமும் அவளைத் தேடும் உள்ளம் உடையவளாய் காணப்படுகிறாள். கற்பு வாழ்வில் இல்லறத்திற்கு ஏற்ற அறிவுரைகளைக் கூறும் பண்புடையவளாய் செவிலித்தாய் திகழ்கிறாள். செவிலியின் பங்களிப்பைக் கி.வா.ஜகந்நாதன், தலைவிக்குத் தோழி எவ்வளவு நட்புரிமை உடையவளோ அதேவகையில் நற்றாய்க்குச் செவிலி தோழமை உடையவள் என்று குறிப்பிடுகின்றார்"28 வாழ்க்கையில் தனக்குக் கிடைத்த அனுபவத்தின் மூலம் இல்லறத்தில் ஈடுபடும் தலைவிக்கு நல்லறிவு வழங்குதல் செவிலியின் இயல்பாகக் கருதப்படுகின்றது. இதனைக்,

**"கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள**
**நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**
**செவிலிக்குரிய ஆகும் என்ப"[29]**

எனத், தலைவிக்குத் தாயை விட அரவணைப்பும் அன்பும் மிகுதியாய் கொடுப்பவளாகச் செவிலிக் காணப்படுகிறாள்.

### பரத்தை

பழங்காலச் சமூகத்தின் கணிகையர் என்ற குலம் சார்ந்தவர்களே பரத்தையர் எனப் படுபவள். தலைவியிடமிருந்து காதல் கணவனைப் பிரித்துத் தான் சேர்ந்து வாழும் வாழ்வை மேற்கொள்பவளே பரத்தையர். பொருள் விழைப்பெண்டிராகக் கருதப்படுபவள். தலைவியின் மக்களைத் தம் மக்களாக எண்ணுபவள். தன்னை இழிந்து பேசும் தலைவியைத் தானும் இழிந்துபேசும் தன்மை உடையவள். இவ்வாறு அகத்திணை மாந்தர்களுள் தலைவன், தலைவி தோழி, செவிலி மற்றும் பரத்தை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாக விளங்கு கின்றனர்.

### தொகுப்புரை

அகப்பொருள் என்பது மனதளவில் உய்த்துணரப் படும் ஓர் உணர்வாகும். அது உள்ளம் மட்டும் நுகரும் பொருளாகும். அதனை உணர்ந்தவாறே கூறவியலாத தன்மை கொண்டது. திணை இலக்கியங்கள் நிலத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. ஐந்திணை மற்றும் கைக்கிளை, பெருந்திணை எனப் பிரிக்கப்பட்டு, பெயர் குறிப்பிடாமல் தலைவன்-தலைவி எனப் பாடுதல், முப்பொருள்கள் (முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள்) பயன்படுத்துதல் ஆகியன முக்கிய மரபுகளாகும். இதனுள் அகத்திணைக்குரிய மரபாக்கமும், உள்ளார்ந்த அன்பு நிலையை அறிய ஐந்திணையே பெரிதும் உறுதுணையாக அமைவதை இக்கட்டுரை புலப்படுத்துகின்றது.

### துணை நூற்பட்டியல்


1. இளம்பூரணர், தொல்காப்பியம்,பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, நூ.12.
2. மேலது., நூ.1.
3. மோகனராசு,திருக்குறளில் மரபுகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, ப.124.
4. இளம்பூரணனார் (உ.ஆ.), மு.நூ., நூ.92.
5. மேலது., நூ. 93.
6. மோகனராசு, மு.நூ., ப.50.
7. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர் - ஓர் ஆய்வு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, ப.1.
8. ந. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், பாரிநிலையம், சென்னை, ப.19.
9. இளம்பூரணனார் (உ.ஆ.), மு.நூ., நூ.2.
10. திருஞானசம்பந்தம்(உ.ஆ.),பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, நூ.6.
11. இளம்பூரணனார் (உ.ஆ.), மு.நூ., நூ.எ. 3.
12. திருஞானசம்பந்தம்(உ.ஆ.),பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, நூ. 7.
13. இளம்பூரணனார் (உ.ஆ.), மு.நூ., நூ.எ. 4.
14. ச.திருஞானசம்பந்தம் (உ.ஆ.), மு.நூ., நூ.8.
15. இளம்பூரணனார் (உ.ஆ.), மு.நூ., நூ. 5.
16. சிலப்பதிகாரம், காடுகாண் காதை, உ.வே.சா. பதிப்பு, சென்னை, பா. 64-66.
17. நம்மாழ்வார், திருவிருத்தம், மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, பா.26.
18. இளம்பூரணனார் (உ.ஆ.), மு.நூ., நூ.20.
19. ச.திருஞானசம்பந்தம் (உ.ஆ.), மு.நூ., நூ.19.
20. வ.சுப. மாணிக்கம், சங்க நெறி, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை ப. 97.
21. இளம்பூரணனார் (உ.ஆ.), மு.நூ., நூ.16.
22. ச.திருஞானசம்பந்தம் (உ.ஆ.), மு.நூ., நூ.25.
23. இளம்பூரணனார் (உ.ஆ.),தொல்காப்பியம், களவியல், நூ.25
24. இளம்பூரணனார் (உ.ஆ.),தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல், நூ.270
25. இளம்பூரணனார் (உ.ஆ.),தொல்காப்பியம், களவியல், நூ. 8
26. மேலது, நூ.23
27. இளம்பூரணனார் (உ.ஆ.),தொல்காப்பியம், கற்பியல், நூ.11
28. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், பாரி நிலையம், சென்னை, ப. 269
29. இளம்பூரணனார் (உ.ஆ.), தொல்காப்பியம், கற்பியல், நூ.13